ආයතනයේ නම - ජාතික විගණන කාර්යාලය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர் - தேசிய கணக்காய்வு அலுவலகம்

பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ நிறுவனப் பொறுப்பு அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Name of the Institute- National Audit Office

Submission of the observations of the Hon. Minister in charge of the institutions under Standing Order No.119(4) in relation to the reports tabled by the Committee on public Accounts of the Parliament and the action to be taken to the Parliament

படிவ இலக்கம் 01

பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இலக்கம் - 492

நிறுவனத்தின் பெயர் - தேசிய கணக்காய்வு அலுவலகம்

| | குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை சரிசெய்வதற்காக நிறுவனத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமைகள் |
|---|---|---|
| | **முதலாம் பகுதி** | |
| 1. | 2017.06.26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் கைதவிர்ப்புக்கள் தொடர்பான தகவல்கள் கொன்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக செயற்பாடு முறைப்படுத்தப்பட்டு சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டு சொத்துக்கள் கொள்வனவு மற்றும் கைதவிர்ப்பு இடம் பெறுகின்ற சந்தர்ப்பங்களில் அது தொடர்பான தகவல்கள் கொன்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 2. | அனைத்து வாகனங்களிலும் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்குரிய அனைத்து குழாம் வாகனங்களுக்கும் நிறுவனத்தின் பெயர் மூன்று மொழிகளை உள்ளடக்கி அரச இலச்சினை பொறிக்கப்பட்டு அச்சிடப்பட்ட ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளன. |
| | **இரண்டாம் பகுதி** | |
| 1. | 2018.01.24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைப்பாட்டின் விசேட நிலைமையின் பிரகாரம் நியதிச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்ட |

| | | |
|---|---|---|
| | முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரசைகள் / சேவை நாடுனர் பட்டயம் ஒன்று முறையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>நிறுவனத்தின் பிரசைகள் / சேவை நாடுனர் பட்டயத்தை செயற்படுத்துவது தொடர்பாக மேற்பார்வை செய்வதற்கு அல்லது மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களுக்கு அறிக்கைகளை வழங்குதல் மற்றும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் இடம் பெறுவதுடன் பொது மக்களுக்கு நேரடியாக சேவை வழங்குதல் இடம் பெறுவதில்லை. அதனால் சேவை நாடுனர் பட்டயம் செயற்படுத்தப்படாது இருந்ததுடன் உரிய காலத்தில் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வு நிறுவனங்களுக்கும் பாராளுமன்றதிற்கும் அறிக்கையிடப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு கணணி மயப்படுத்தப்பட்ட தரவு முறைமையொன்று மூலம் கண்காணித்தல் இடம்பெறுகின்றது. |
| 2. | அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றுக்களை சமர்ப்பித்திருக்கவில்லை. | தற்போது அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றுக்களை சமர்பித்துள்ளதுடன் மோசடி எதிர்ப்புச் சட்டத்தின் பிரகாரம் முறைப்படி நடவடிக்கை எடுப்பதற்காக அனைத்து உரிய உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

ஒப்பம்/ எல்.எஸ்.ஐ. ஜயரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

எல்.எஸ்.ஐ.ஜயரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி